
Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

# மனைப்பொருளியல்

## தரம்-10

# நாளாந்த செயற்பாடு



எம்.எச்.எப்.ரிஸ்லா
ஸ்ரீ கதிரேசன் த.ம.வி
தேசிய பாடசாலை

மனை வளங்கள்

மனித தேவையானது பல்வேறுபட்டவையாகும் உதாரணமாக மனித தேவைகளை உடல் உள பௌதீக சமூக தேவைகள் என வகைப்படுத்தலாம் இவ்வாறான தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள பல்வேறுபட்ட வளப்பயன்பாடு இன்றியமையாத ஒன்றாக உள்ளது

இவ்வாறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள மனிதனால் இரு வகைப்பட்ட மனை வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன அவையாவன

1)மனித வளங்கள்

2)மனிதனில்லாத வளங்கள் என்பவையாகும்

மனித வளங்கள்

மனிதனிடத் இயல்பாகவே காணப்படும் சக்தியை “மனிதவளம்” எனப்படும்

இவ்வாறு மனிதனிடம் இயல்பாகவே காணப்படும் சக்திகளாக

**I** அறிவு

**II** மனப்பாங்கு

**III** திறன்

**IV** சிரமம்,சக்தி விரயம்

அறிவு:-கல்வி மற்றும் அனுபவத்தினூடாக பெற்று விளங்கிக் கொண்ட விடயங்களை “அறிவு”எனலாம்

மனப்பாங்கு:-ஒருவரது மனதில் ஏற்படும் சிறந்த உணர்வு “மனப்பாங்கு” எனப்படும்

திறன்:- பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபடம் போது நபர் ஒருவரிடம் காணப்படும் இயலுமை “திறன்” எனப்படும்

**V** சிரமம் சக்தி விரயம் பல்வேறு செயற்பாடுகளில் ஒரு நபரிடமிருந்து பெறக்கூடிய உடல் உள சக்தியை சக்தி சிரமவிரயம் எனலாம்.

மனிதனின் வளங்கள்

மனித சக்திக்கு மேலதிகமாக யாதேனும் ஒரு செயற்பாட்டிற்கு பயன்படும் ஏனைய வளங்கள் மனிதனில்லாத வளங்கள் எனப்படும்.

மனிதனில்லாத வளங்கள்

1.பௌதிக வளம்

2.பௌதிகம் அல்லாத வளம்

என இரு வகைப்படும்

பௌதிக வளம் பொருட்களாக காணப்படும் வழங்களாக கருதப்படுகிறது

பௌதிக அல்லாத வளம் பொருட்களாக கருத முடியாத ஏனைய வழங்களாக கருதக்கூடியவை

பௌதீக வளம்

பணம்

எரிபொருள்

நீர்

இடவசதி

சொத்துக்களும் பண்புகளும்

பொது வசதிகள்

பௌதிக அல்லாத வளம்

காலம்

மின்சாரம்

பணம்

நவீன சமுதாயத்தில் பொருட்கள் சேவைகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள பிரதானமாக பரிமாற்றப்படும் பொருள் பணம் எனப்படும்

பணம் பெரும் வழிமுறைகள் ஆக

உழைப்பின் மூலம் கிடைக்கும் சம்பளம்

வங்கியில் இருந்து கிடைக்கும் வட்டி

பங்குகளை கொள்வனவு செய்வதன் மூலம் கிடைக்கும் பங்குலாபம்

பரிசுகள் மூலம் கிடைக்கும் பணம்

குத்தகை

கூலி

எரிபொருள்

வீட்டுக்கு ஒளியை பெற்றுக் கொள்வதற்காகவும் ஏனைய செயற்பாடுகளுக்கு வெப்பத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் தேவையான பௌதிக வளம் "எரிபொருள்" எனப்படும்

நீர்

மனிதனதும் தேவைகளையும் விட்டுத் தேவைகளையும் நிறைவேற்றிக்கொள்ள மிகவும் அவசியமான வளமாக "நீர்" காணப்படுகின்றது.

இடவசதி

யாதாயினுமொரு செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு வசதியை வழங்கும் இடம் "இடவசதி" ஆகும் இது ஒரு பௌதீக வளமாக கருதப்படுகிறது

சொத்துக்களும் பண்டங்களும்

ஒரு நபரின் காணி தோட்டம் வீடு பொருட்கள் உபகரணங்கள் ஆடையணிகள் ஆபரணங்கள் ஆகிய அனைத்தும் பௌதீக வளமாகும்

பொது வசதி

இலபமாக அல்லது மிகக் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளும் அனைத்தும் பொது வசதி எனப்படும்

உதாரணம் விளையாட்டு மைதானம்

நூலகம்

முப்படைகளினதும் பொலிசாரினதும் பாதுகாப்பு

அரச கல்வி நிறுவனங்கள்

சுகாதார பாதுகாப்பு சேவையும் சௌபாக்கிய சேவையும்

போக்குவரத்துச் சேவை

பௌதிக அல்லாத வளம்


**I** காலம்

காலம் வரையறுக்கப்பட்ட வளமாகும் பல்வேறு சேவைகளில் ஈடுபடும் போதும் காலத்தை சரியாக திட்டமிடுதல் அவசியமாகும் இவ்வாறு செய்வதன் மூலம் வாழ்வை சிறப்பானதாக மாற்றலாம்

**II** மின்சாரம்

மின் சக்தியானது ஒரு சக்தி முதலாகும் இதற்கு பணப் பெருமதி உண்டு மேலும் வெப்பம் ஒளி ஒலி போன்றவற்றைப் பெற உதவும்

# மனை வளங்களை வகைப்படுத்துவோம்




தொகுப்பு :- H.F.ரிஸ்லா( மனைப்பொருளியல்)

கே/தெஹி/கதிரேசன் தேசிய பாடசாலை

தெரணியகலை